
314

# எட்டிகுடித் தலவரலாறு



தேவஸ்தான வெளியீடு.

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307.
MANAGIRI VIA

Acc. No: 794
Q1: 38

1971

விரோதிகிருது ஆண்டு சித்திரைத்திங்கள்

2280
31-1

உ

சிவகுகமயம்.

# எட்டிகுடித் தலவரலாறு.

794

தொகுத்தவர்:

செந்தமிழ்ச் செம்மல், வித்வான்

**சோ. கணபதி தேசிகர்** அவர்கள்

முதனிலைத் தமிழாசிரியர்,

நகராட்சி உயர்நிலைப்பள்ளி, கும்பகோணம்.

கோவிலூர் ஆதீனம்
ACC.NO: 794
Q1:38
கோவிலூர்-630 307

வெளியிட்டோர்:

**ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம்,**

**எட்டிகுடி அஞ்சல்,**

நாகை வட்டம், தஞ்சை மாவட்டம்.

10—5—71

**விலை 50 காசு**

1971 முதல் பதிப்பு 1000 பிரதிகள்
1971 இரண்டாம் பதிப்பு 2000 பிரதிகள்
1973 மூன்றும் பதிப்பு 2000 பிரதிகள்
1976 நான்காம் பதிப்பு 2000 பிரதிகள்

## உள்ளுறை.

| | பக்கம் |
|---|---|
| எட்டிகுடித்தல அமைப்பும் சிறப்பும் | 1 |
| சித்தி விநாயகர் சிறப்பு | 4 |
| ஸ்ரீ சௌந்தரேசுவரர் சிறப்பு | |
| ஆனந்தவல்லியின் அரும்பெரும் வைபவம் | 7 |
| ஸ்ரீ ஆறுமுகவேலவர் சிறப்பு | 12 |
| திருமகள் பூசித்தது | 17 |
| சூரியன் பூசித்தது | 17 |
| சனிபகவான் பூசித்தது | 18 |
| வான்மீகி பூசித்தது | 19 |
| முத்தரசன் அரசாண்டது | 20 |
| பிரபந்தங்களும் நூல்களும் | 21 |
| திருப்பணிகள் | 22 |
| நிர்வாகம் | 23 |
| எட்டிகுடித் திருப்புகழ் | 24 |

# பதிப்புரை.

எட்டிகுடி முருகனருள் விளங்கும் தொல் தலம். இத்தலத்தில் ஆண்டுதோறும் கூடும் அன்பர்கள் கூட்டம் இங்கே வழிபட்டு இருமை இன்பங்களும் பெற்று வருதல் கண்கூடு.

இத்தலத்திற்கு ஒரு விளக்கமான வரலாறு வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து, ஒருவரலாறு எழுதித்தருமாறு குடந்தை நகராட்சி உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியரும், சிறந்த சிவ பூசைச் செல்வரும், சைவ நூல்களிற் பழுத்த புலமையுடையவரும் ஆகிய செந்தமிழ்ச்செம்மல் வித்துவான் திரு. சொ. கணபதி தேசிகரவர்களை கேட்டுக்கொண்டேன். அவர்களும், முருகன் பற்றிய நூல்களையெல்லாம் துருவியாராய்ந்து சுவை கெழும, எழுதி யுதவினர்கள். இத்தல வரலாற்றைப் பெறும் அன்பர்கள், பக்தியுடன் பயின்று ஒவ்வொருபொழுதும் உளமார முருகனை நினைந்து வழிபடுவராயின் முருகன் அருள்பெறுதல் உறுதி. இதனை விரைவில் வெளியிடுமாறு எழுதியுதவிய தேசிகர் அவர்கட்கும் திருக்குவளை அஞ்சுகம், முத்துவேலர் அரசினர் உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர் புலவர் இரா. சு. மாரிமுத்து அவர்கட்கும் என் நன்றி.

அன்புலகம் பெறுக, இன்புறுக.

இங்ஙனம்,

ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம், எட்டிகுடி,
1—5—71.

**G. சோமசுந்தரம் B. Sc.,**
(முன்னாள் செயல் அலுவலர்)

ஓம்.

வேலு மயிலுந் துணே.

# முன்னுரை.

உலகெலாம் வாழ "குருவாய் வருவாய் அருள்வாய்குகனே"

பேரன்புடையீர்!

திருமகள் திருமுகமென்னத் திகழும், ஏழ்தலம் புகழ் காவிரியால் விளே சோழ மண்டலத்தில் உள்ள சிவதலங்கள் பற்பல. இவற்றுள் கண்கண்ட தெய்வமாய் கந்தன் காட்சி தரும் தலங்கள் சிலவற்றுள் தலேயாயது எட்டிகுடியேயாகும். இப்பதியில் அழகிய மயில் மேலே ஆறுமுகனுய் அருகில் வள்ளி தெய்வானேயுடன் உள்ள வரமருளும் வள்ளலேக் கண்டாரே கண் பெற்ற பயனேக் கண்டவராவர்.

இத்தலம் சப்த விடங்கத் தலங்களில் திருக்கோளிலிக்கும் திருவாய்முருக்குமிடையே தேவாரம் பெற்ற பல தலங்களால் சூழப்பெற்றது. சோழ அரசர்கள் பரம்பரையில் சிறந்த சிவபக்தனுய் விளங்கிய முத்தரசன் ஆட்சியில் தெய்வத்தன்மை பொருந்திய சிற்பியால் இறைவன் திருவுளப்படி இரு கால்களே ஆதாரமாய் நிற்கும் அழகு மயில் மேல் ஆறுமுகமும் பன்னிருகையுமாய் அமர்ந்த திருக்கோலத்தில் இப்பதியில் அமைக்கப்பெற்ற இம்மூர்த்திக்கு இணேயில்லே

மாதக் கிருத்திகைகளில் மக்கள் கூட்டமும், சிறப்பாக சித்திராபௌர்ணமியில் எண்ணிக்கையற்ற பலவிதக்காவடிகளோடு, பக்தி வெள்ளமாய் பலரும் கூடிப்பரவும் காட்சி பார்க்கத்தெவிட்டாது. எல்லாம் வல்ல இம் முருகனின் அருள்பெற்று இன்புற நினேயாதார் எவருமில்லே எனலாம்.

இத்தல வரலாற்றைச் சிறப்புடன் எழுத ஆறுமுகப் பெருமானின் அருட்பெருந்துணையுடன், அன்பாற் பன்முறை உரைத்து ஊக்கிய உழுவலன்பர், இத்தலத்திறைபணியாளர் உயர்திரு. G. சோமசுந்தரம் பிள்ளை B. SC., அவர்களின் அளவிலா அன்பும், ஒய்தலில்லா ஊக்கமும் இந்நூலை உருவாக்க எனக்குப் பெருந்துணையாயிருந்தன இதனை வெளியிடுவதில் பேராதரவு நல்கிய தமிழக அரசு இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை ஆணையர் உயர்திரு. K. S. நரசிம்மன் B.A., B.L., I.A.S. அவர்கட்கும், தஞ்சை துணை ஆணையர் உயர்திரு V. S. கோதண்டபாணி B.SC., B.L., அவர்கட்கும், நாகப்பட்டினம் உதவி ஆணையர் உயர்திரு. P. புலியூருடையான் அவர்கட்கும் எனது அன்பு கலந்த நன்றி உரியதாகும் இவ்வாலய அறங்காவலர்கள் உயர்திரு. M. சுவாமிநாத முதலியார் அவர்கள் (நிர்வாக அறங்காவலர்) உயர்திரு. V. செல்வராஜ் அவர்கள், உயர்திரு. R. துரைசாமித் தேவர் அவர்கள், உயர்திரு. S. நடராச பிள்ளை அவர்கள், உயர்திரு P. சிங்காரு வாய்க்காரர் அவர்கள் ஆகிய அனைவருக்கும் எனது நன்றி உரியதாகும்.

இதனை நன்முறையில் அச்சிட்டுதந்த நாகப்பட்டினம் ராஜன் அச்சகத்தாருக்கும் என் மனங்கனிந்த நன்றி உரித்தாகும். ஸ்ரீ ஆறுமுகவேலவர் திருவடித்தாமரைக்கு இந் நூல் மலர் சிறு காணிக்கையாகும். இதன் மணம் நுகர்ந்து முருகன் திருவருளால் அன்புடை உலகம் வளம்பல பெற்று வாழ்க!

''எட்டிகுடிப்பதி வேலா மேலோர் பெருமாளே''

சிற்றம்பலம்
5, வேம்படித்தெரு,
கும்பகோணம்.

அன்பன்,
**சோ. கணபதி தேசிகன்.**

## சித்தர்கள் அடங்கிய இடங்கள்

சித்தர்கள் பதினெண்மர் என்றும் இருபத்தொருவர் என்றும் கூறப்பெறுவர். அவர்களில் ஒருவராகிய வால்மீகி முனிவர் இக்கோயிலினுள் வன்னிமரத்தின்கீழ் அடங்கியுள்ளார்கள். மற்ற சித்தர்களின் பெயர்களும் அவர்கள் அடங்கிய தலங்களின் பெயர்களும் முறையே பின்வருமாறு

| | சித்தர்கள் | தலங்கள் |
|---|---|---|
| 1 | திருமூலர் | சிதம்பரம் |
| 2 | நந்தி | காசி |
| 3 | கொங்கணர் | திருப்பதி |
| 4 | நந்திதேவர் | சீர்காழி |
| 5 | தன்வந்திரி | வைத்தீஸ்வரன்கோயில் |
| 6 | கமல முனி | திருவாரூர் |
| 7 | வால்மீகி | எட்டிகுடி |
| 8 | சட்டைமுனி | ஸ்ரீரங்கம் |
| 9 | கரூர்த்தேவர் | கருவூர் |
| 10 | போகர் | பழனி |
| 11 | சுந்தரானந்தர் | மதுரை |
| 12 | மச்சமுனி | திருப்பரங்குன்றம் |
| 13 | இராமதேவர் | அழகர்மலை |
| 14 | கும்பமுனி | திருவனந்தபுரம் |
| 15 | கோரக்கர் | ஸ்ரீசைலம் |
| 16 | குதம்பைச்சித்தர் | திருக்கழுக்குன்றம் |
| 17 | பதஞ்சலி | ராமேஸ்வரம் |
| 18 | இடைக்காடர் | திருவண்ணமலை |
| 19 | அகப்பேய்ச்சித்தர் | விருத்தாசலம் |
| 20 | கவரிமான் முனிவர் | திருக்காளத்தி |
| 21 | பாம்பாட்டிச்சித்தர் | திருக்கடவூர் |

# எட்டிகுடித்தல அமைப்பும்-சிறப்பும்.

கோவில் இருப்பிடம்:- எட்டிகுடி:- எட்டி, செட்டிகளின் பட்டத்துள் ஒன்று ஆகும் எட்டி என்ற பட்டம் பெற்று "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்ற உயர்ந்த எண்ணம் படைத்த செட்டிமக்கள் பலர்பெருங்குடியினராய வாழ்ந்ததனாலும், எட்டி என்ற ஓர் வகை மரம் வனமாக வளர்ந்திருந்ததனாலும் எட்டிகுடி, காஞ்சிரங்குடி எனவும் பெயர் பெறும் எட்டிகுடி. தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் கோட்டத்தில் அமைந்துள்ளது.

வழிகள்:- திருத்துறைப்பூண்டியில் (சந்திப்பு) இறங்கி நாகை செல்லும் பேருந்து வண்டி மூலம் 10-வது மைலில் உள்ள சீராவட்டம் பாலத்தடியில் இறங்கி வடக்கே செல்லும் சாலையில் 2 மைலில் (திருவாய்மூர் என்னும் தேவாரம் பெற்ற தலத்தின் வழியாக 1 மைலில்) அமைந்துள்ளது.

திருவாரூரிலிருந்து தாளந்திருவாசல் வேதாரண்யம் செல்லும் பேருந்து வண்டிகள் எட்டிகுடி வழியாக செல்வதால் இவ்வழி மூலம் இத்தலமடைதல் எளிதாகும்.

மூலவர் பெயர்:- ஸ்ரீ ஆறுமுகவேலவர் வள்ளி தெய்வானையுடனமர்ந்தருளியுள்ளார்.

இறைவன் பெயர்:- மூலலிங்கம் ஸ்ரீ சௌந்தரேசுவரர்.

இறைவியின் பெயர்:- ஆனந்தவல்லி

தலவிருட்சம்:- எட்டி மரம் (தற்பொழுது வன்னிமரம் என வழங்கப்படுவதற்குத் தக்க ஆதாரம் இல்லை)

தீர்த்தங்கள்.- சரவணப்பொய்கை — இது கோயிலுக்கு முன்னே அமைந்துள்ளது.

வழிபட்டு பேறு பெற்றோர்:- திருமகள், சூரியன், சனி, வான்மீகர், முத்தரசன் முதலியோராவர்.

சுற்றுக் கோயில்கள்:- கொக்கரித்த விநாயகர் கோயில், இடும்பன் கோயில், கடம்பன் கோயில்.

உற்சவங்கள்:- ஒவ்வொரு கிருத்திகையும் ஒவ்வொரு செம்மனச் சீலரால் நடைபெறுகிறது. இரவில் ஸ்ரீ வேலவர் மயில்வாகனத்தில் இவர்ந்து வீதியுலா வருவார்.

சித்திராபௌர்ணமி உற்சவம்:- பத்து நாட்கள் நடைபெறும். விசேஷ காவடிகள் பாலாபிஷேகம் மிகப்பிரசித்தம்.

வைகாசி—விசாக உற்சவம் 1 நாள்
ஐப்பசி—கந்தர் சஷ்டி 6 நாள்
கார்த்திகை—திருக்கார்த்திகை விசேஷம்.
மார்கழி—திருப்பள்ளியெழுச்சி,
திருவாதிரை—நடராசர் உற்சவம்



ஆறுமுகப்பெருமான்

நித்திய பூஜா காலங்கள்:-

| | | |
|---|---|---|
| திருவனந்தல் | காலை 6–00 | மணி |
| காலசந்தி | ,, 9–00 | ,, |
| உச்சிக்காலம் | பகல் 12–00 | ,, |
| சாயங்காலம் | மாலை 5–30 | ,, |
| இரண்டாங்காலம் | இரவு 8–00 | ,, |
| அர்த்தயாமம் | ,, 9–00 | ,, |

முக்கிய சந்நிதிகள்:-

1 ஸ்ரீ ஆறுமுகவேலவர்
2 ஸ்ரீ சௌந்தரேசுவரர்
3 ஸ்ரீ ஆனந்தவல்லி
4 ஸ்ரீ வன்னிமரத்தடி சித்திவிநாயகர்

சிற்பச் சிறப்பு:- ஸ்ரீ ஆறுமுகவேலவரின் அழகிய திருவுருவும், திருவாசிகையும், மயிலும் ஒரே சிலையில் அமைந்துள்ள சிறப்பு கவனிக்கத் தக்கது.

வேறு பெயர்கள்:- எட்டிகுடி, காஞ்சிரங்குடி.

ஸ்ரீ அருணகிரிநாதர் இத்தலம் போந்து ஸ்ரீ ஆறுமுகவேலவரைத் தரிசித்துப் போற்றித் திருப்புகழ் திருவாய்மலர்ந்தருளினர் "எட்டிகுடி" என்று இத்தலத்தை சிறப்பித்துள்ளார்.

அண்மையில் உள்ள சிவத்தலங்கள்:-

திருக்காரவாசல் (திருக்காறுயில்)
திருக்கோளிலி (திருக்குவளை)
திருவாய்மூர்

**தெய்வ மூர்த்தங்கள்:-** வன்னி மரத்தடி—சித்திவிநாயகர், இம் மரத்தடியில் வான்மீகர் சமாதி, நவவீராள, மனோன்மணி, பிரதான விநாயகர், சீனிவாச சௌந்தரராஜப்பெருமாள், மகாலெக்ஷ்மி, சண்டேசர், சிவ சண்டேசர், நவகிரகங்கள், சனீஸ்வரபகவான், பைரவர், சூரியன், சரவணப்பொய்கையையடுத்த தேரடியில் இடும்பன், கடம்பன் சந்நிதிகள். திருவாய்மூருக்கு செல்லும் வழியில் உள்ள கொக்கரித்த விநாயகர் கோவில் இவ்வாலயத்தைச் சேர்ந்தது.

**உற்சவர்.-** 1 ஆறுமுகம், வள்ளிதெய்வானை யுடன், (மூலவரைப்போல) 2 பாலசுப்ரமண்யம் (சஷ்டிதோறும் புறப்பாடு) 3 நடராஜா, சிவகாமி அம்மன் 4 மாணிக்கவாசகர், சுந்தரர், விநாயகர், சண்டிகேசுவரர் 5 சிங்காரவேலர் வள்ளி தெய்வானை சமேதர், 6 ஸ்ரீ தேவி பூதேவி சமேத ஸ்ரீ வெங்கடாசலபதி.

### சித்திவிநாயகர் சிறப்பு.

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே
(திருமந்திரம்)

தனக்கு ஒப்பாரும் மிக்காருமாய தலைவர் இல்லை யென்பதை உணர்த்துவதே விநாயகர் என்பதன் பொருளாகும். "ஒருகை முகன் தம்பியே என திருமுருகாற்றுப்படையில் நக்கீர

ளரும், திருமந்திரத்தின் முதற்செய்யுளில் விநாய கரைப்பற்றி திருமூலரும் பாடியுள்ளனர். ஞான மயமான திருமேனியும் பிரணவ வடிவை உணர்த் தும் யானை முகமும், பஞ்ச கிருத்தியத்தைச் செய்யும் வகையை உணர்த்தும் ஐந்து கரங்களும், சோம சூர்ய, அக்கினியை உணர்த்தும் மூன்று விழிகளும், மலவாதனையினின்று ஆன்மாவைக் காத்துவினை வெப்பத்தைத் தீர்த்தலை உணர்த்தும் இரு செவிகளும், அண்டங்களும் உயிர்களும் தனக்குள் அடங்கியதை உணர்த்தும் பெரு வயிறும் கொண்ட திருவுருவுடன் தெற்குப் பிராகாரத்தில் உள்ள வன்னிமரத்தின் மேடையில் திருக்கோயில் கொண்டு கிழக்கு நோக்கி இருந்து, தம்மடி பணிவார் செயல்களெல்லாம் சித்திக்கச் செய்யும் இத்தலத்து சித்திவிநாயகர் சிறப் புடையவராவர்.

## ஸ்ரீ சௌந்தரேசுவரர் சிறப்பு

எழில் மிக்க காடாய் எட்டி மரங்கள் நிறைந்து எட்டிவனம் என்றழைக்கப்பட்ட இப் பகுதி, மக்கள் குடியேற்றத்தால் மாற்றமடைந்து எட்டிக்குடி என்று அழைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இவ்வனத்து எட்டிமரம் ஒன்றின் கீழ் எழிலார் வடிவுடன் இலிங்கமாய் விளங்கிய எம்பெருமானை வான்மீகி வழிபட்டார். இத் தலத்தில் இன்று ஸ்தல விருக்ஷமாக விளங்குவது வன்னிமரமே. இது ஆதியில் எட்டி மரமாக இருந்திருக்க வேண்டும். அறிவு சான்ற

பெரியோர்கள் இயற்கை வடிவான இறைவனோ டியைந்த இன்பவாழ்வு நடத்தினார்கள். எட்டி மரத்தடியில் உயிர்த்துணையாம் தோன்றாத் துணைக்கோர் துணையாகித் துவாத சாந்தப் பெருவெளியில் துரியங் கடந்த பரநாத மூலத் தலத்து முளைத்த முழுமுதலாக உள்ள கயிலை நாயகன், காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய், நீணாகம் அணிந்தார்க்கும் நிகழ் குறியாம் சிவலிங்கமாகி அமர்ந்தருளினார். எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டா லும் மன்னிய சீர்ச் சங்கரன்தாள் மறவாமையே பொருள் என்று மாண்புமிக்க மக்கள் வாழ்ந் தனர். செய்வினையும் செய்வானும் அதன் பயனும் கொடுப்பானும் மெய்வகையால் நான்காகும் விதித்த பொருள் எனக்கொண்டு இந்நான்கு இயல்புகளும் சைவநெறி அல்லவற்றுக் கில்லையென நிறைமொழி மாந்தர் உணர்ந்தனர்; அகநிறைந்த பேருவகை அடங்காத ஆதரவால் உவகைபூத்து உய்வகையால் "பொருள் சிவன்" என்று அருளாலே உணர்ந்தனர்; எல்லாம் இலிங்கமயம் என்று உணர்ந்தனர்.

"இலிங்கம தாவது யாரு மறியார்
இலிங்கம தாவது எண்டிசை யெல்லாம்
இலிங்கம தாவது எண்ணெண் கலையும்
இலிங்கம தாக வெடுத்த துலகே
சத்தி சிவமாம் இலிங்கமே தாபரம்
சத்தி சிவமாம் இலிங்கமே சங்கமம்
சத்தி சிவமாம் இலிங்கம் சதாசிவம்
சத்தி சிவமாகுந் தாபரந் தானே (திருமூலர்)

இவ்விரு அருட்பாடல்களையும் சிந்தித்து உணர்க.

சித்தர்களில் ஒருவராகிய வான்மீகிமுனிவர் தலையாய முனிவர்களுள் சிறந்தவராவர். கயிலை நாயகன் கருத்தினை யோர்ந்து வான்மீகி முனிவர் எம்மிறை சிவபெருமான் உறையும்பல தலங்கட்கும் சென்று தரிசித்துப் பயன்பெற்றுத் திருவருள் துணை செய்தவாறு எட்டித்தலம் மேவினர். எட்டி மரத்தடியில் இருக்கும் சிவலிங்கப்பெருமானைக்கண்டார். தன்னைமறந்து வழிபாடு இயற்றினர்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணல் அதுகண்டு அருள்செயா நிற்கும்" என்ற திருவாக்குப்படி பரமபதியாகிய சிவபெருமானைப் பத்திமையாற் பணிந்தேத்திய பயனைப் பெறுவாராய்த் திகழ்ந்தார். இவ்வாறு பன்னெடுங்காலம் சிவபூசனை இயற்றி அமல யோக நெறிநின்று, உள்ளொளி பெற்று உயர் சிவகரணங்கள் பெற்றுப் பொருவிலன்புருவமாகி எம்பெருமான் திருவடி நிழலில் இரண்டறக் கலந்தார். அவர் இத்தலத்திலேயே அடங்கினு ரென்பது ஐதிகமாகும் வான்மீகி வழிபட்ட சிவலிங்கப்பெருமானே ஸ்ரீசௌந்தரேசுவரராவார் அவர் இதுபோது தன்னடி சார்ந்த மெய்யடியார் கட்கு திருக்கோயிலின் உள்ளே சிவலிங்கத் திருமேனியின் உள்ளிருந்து ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருங் காட்சியளிக்கிருர்.

## ஆனந்தவல்லியின் அரும்பெரும் வைபவம்.

திருக்கயிலையில் சிவபெருமானும் பார்வதி

யும் திருவோலக்கங் கொண்டிருக்குங் காலையில் ஒரு சமயம் பார்வதிதேவியார் பரமேசுவரனைப் பார்த்து "பிருங்கி முனிவர் மட்டும் சத்தியை வழிபடாமல் தங்களையே வழிபடக்காரணம் யாது" எனவினவினர். பரமேசுவரன் தேவியாரை நோக்கி "பிருங்கி முத்தி ஒன்றினையே கருதி என்னை மட்டும் வழிபடுகிறான். இம்மை மறுமை இன்பங்களை அம்முனி நாடவில்லையாதலின் உன்னை வழிபடவில்லை. கோபிக்க வேண்டாம்" எனத் திருவாய் மலர்ந்தருளினர். சிவபெருமான் கூறியருளிய இச்சமாதானத்தை ஏற்காமல் "பிருங்கியை வணங்குமாறு செய்வேன்" எனச் சபதம் விடுத்து, எம்பெருமானிடம் விடைபெற்று மண்ணுலகமடைந்து சிவத்தலங்களிற் சிறந்த எட்டித்தலம் வந்து சேர்ந்தருளினர்.

அவ்வமயம் வான்மீகி முனிவர் எட்டித் தலத்தில் சிவராஜயோகத்தமர்ந்து சிவஞான நிட்டை கூடியிருந்தார். அவர்மீது புற்று மூடியிருந்தது திருவருள் தூண்டிய வகையில் தனது கண்களைத் திறந்தார். அன்னை பராசத்தி அவர் முன்னர் தனது திருக்கோலம் காட்டினர். வான்மீகி எல்லையில்லாத பெருமகிழ்ச்சி அடைந்தவராய் ஆடினர்; பாடினர்; தோத்திரம் செய்தார். வான்மீகி முனிவர் தேவியாரை நோக்கி வந்த காரணம் அறியப் பிரார்த்தித்தார்.

உடனே காருண்ணிய வடிவமான அன்னை பார்வதி "பிருங்கிமுனிவர் சிவபெருமானை மட்டும்

வழிபடுவதையும், சிவபெருமானிடம் காரணம் கேட்ட விபரத்தையும் கூறி, எம்மிறை சிவபெருமானுடன் கூடியுடனுயிருக்கும் நிலையைத் தவம் செய்து பெறுதல் வேண்டி எட்டித்தலம் சார்ந்தேன்'' என்று திருவாய்மலர்ந்தருளினர்.


வான்மீகி முனிவர் பார்வதிதேவியின் திருவடிகளில் பணிந்தெழுந்து "தாங்கள் சிவபெருமானை விட்டுப்பிரியாதிருக்கும் நிலைவேண்டில்'' ''கேதாரீசுர விரதம்'' இருந்தால் தாங்கள் திருவுள்ளத்தில் மேற்கொண்ட காரியம் சித்திக்கும்'' என்று கூறினர்.

புவனம் பதினன்கையும் பூத்தவண்ணம் காத்தருள்புரியும் எம் அன்னை பார்வதிதேவியார் அறியாதவளைப் போலத் தனக்கு விரதமனுட்டிக்கும் முறைமையைக் கூறவேண்டுமென வான்மீக முனிவரைக் கேட்டருளினர்.

சொல்லும் பொருளும் என நடமாடும் துணைவருடன் புல்லும் பரிமளப் பூங்கொடியாம் பார்வதிதேவியாரை நோக்கி வான்மீகி முனிவரும் கூறலானர். ''அன்னை ஆனந்தநிதியே! புரட்டாசி மாத வளர்பிறை தசமி முதற்கொண்டு ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசி வரையில் நாள் தோறும் அதிகாலையில் எழுந்து நீராடி, நியமமாக விபூதி, உருத்திராக்கம் தரித்து ஒரு ஆலமரத்தடியில் மண்ணால் சிவலிங்கத்தைப்பிடித்துச் சிவாகம முறைப்படி அபிஷேக ஆராதனை செய்து வெல்லம்

ஒன்று மஞ்சள் ஒன்று, சந்தன உருண்டை ஒன்று அதிரசம் ஒன்று, பழம் ஒன்று, தேங்காய் ஒன்று. வெற்றிலை ஒன்று, பாக்கு ஒன்று வைத்து நிவேதனம் செய்துத் தூமலர்தூவித் தொழு தேத்திநமஸ்காரம்செய்துவிட்டு இருபத்தொன்று இழைகொண்ட நூலில் ஒரு முடிச்சுப்போட்டு, பிறகு வேறொன்றும் உணவு உட்கொள்ளாமல் நிவேதித்த அதிரசத்தைமட்டும் உண்டு, தண்ணீர் அருந்தித் தவம் செய்யவேண்டும். இந்த நியமம் தவறாது இருபத்தொரு நாளும் பூசித்து, இருபத் தொன்று முடிச்சுகளையும் போடவேண்டும். இவ் வண்ணம் சிவ பூசை விரதம் முடிவுறும்போது பரமசிவம் நாம பூசித்த இலிங்கத்தினின்றும் தோன்றி, இடபாரூடராய்க் காட்சியளித்து வேண்டிய வரத்தைத் தந்தருளுவார் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை'' என்பதாம்.

இவ்வாறு கேட்டருளிய உலகையாளுடை யாள் வான்மீகி முனிவரை ஆசீர்வதித்து உல குய்ய, ஆன்ம கோடிகள் உய்ய, உய்யுநெறி காட்ட, தாமே அந்தக் கேதாரீசுவர விரதத்தை முறைப்படி செய்து முடித்தார். இருபத்தோராம் நாளன்று எம்பெருமாட்டியின் பூசை முடிவிலே, அச்சிவலிங்கத்தினின்றும் சிவபெருமான் தோன்றி இடபாரூடராய்க் காட்சியளித்தார். உமாதேவியாரும் எம்பெருமானது கருணைத் திறத்தை வியந்து பலவாறு துதித்து, தான் அவரைவிட்டுப் பிரியாத வரத்தை வேண்டினர். அக்கணமே சிவபெருமானும் தனது உடம்பில்



வாமபாகத்தைக்கொடுத்து சிவம் சக்தி இரண்டும் ஒருருவாய்த் திருமேனிகொண்டு அமர்ந்தார்.

அவ்வாறு அம்பிகை பார்வதியின் முன்னர் சிவபெருமான் சௌந்தர்ய வடிவமாய்க் காட்சி அளித்து ஸ்ரீ சௌந்தரேசுவரர் ஆக இத்தலத்தே அமர்ந்தார். அம்பிகை உமாதேவியார் தாம் திருவுள்ளத்தில் எண்ணியவாறு இயற்றிய தவத்திற்கு எளியராகி எம்பெருமான் காட்சியளித்த விசேடத்தினுல் ஆனந்தம் அடைந்து ஆனந்த வல்லியாய் சிவபெருமானது செம்பாதியைக் கொண்டருளிய ஆனந்த அமுதினைத் தன்னடியார்க்கு வாரி வழங்கிக்கொண்டு இத்தலத்தே அமர்ந்துள்ளாள்.

பின்னர் பிருங்கிமுனிவர் தன் சிவபூசையை முடித்துக்கொண்டு, எம்பெருமானைத் தரிசிக்க வந்தார். மாதிருக்கும் பாதியனைக்கண்டார். மனம் திகைத்தார்; தனது தவ வலிமையினுல் வண்டுருக்கொண்டு, அவ்வடிவத்தினைத் துளைத்துக் கொண்டு, சிவபெருமானை வலம் வந்தார். ஆனந்த வல்லி கோபமுற்று, சத்தி அம்சமாகிய சதையையும் இரத்தத்தையும் விட்டு விடுமாறு ஆணையிட, பிருங்கி முனிவரும் சதையையும், இரத்தத்தையும் உதறித்தள்ளினுர். நிற்க இயலாமல் தள்ளாடினுர் சிவபெருமான் முனிவர்க்குக் கால் ஒன்றையும் ஊன்றுகோலையும் கொடுத்தருளினுர். அந்நாள் முதல் பிருங்கி முனிவர் அப்படியே இருந்து வரலானுர்.

இவற்றைக் கண்டதிசயித்த அகிலாண்ட நாயகியான பார்வதி தேவியாரிடம் சிவபெருமான், ''சிவமின்றிச் சத்தியில்லை, சத்தியின்றிச் சிவமில்லை'' அண்ட பிண்ட சராசரம் யாவும் நம்மிருவரது வடிவமே ஆகும் என்ற உண்மை நிலையினை உபதேசித்தருளினர்.

இத்தகைமை வாய்ந்த ஆனந்தவல்லியுடனுறையும் சௌந்தரேசுவரரை வணங்கித்தியானம் செய்வோர் இகபர சௌபாக்யம் அடைவதோடு பேரின்ப முத்தி நிலை எய்துவர்.

### ஸ்ரீ ஆறுமுக வேலவர் சிறப்பு.

கந்தன், முருகன், சேயோன், செவ்வேள், நெடுவேள், வேலவன், குமரவேள், ஆறுமுகம், சுப்பிரமணியன் என பலவாறாக உரைக்கப் படுபவர் ஒருவரே. கந்தன் எனும் பெயர் இனியது —இனியவன் என்று கூறிவிடலாம்.

''காதன்மை கந்தா'' என்று தொடங்கும் குறளில் கந்து என்பது பற்றுக்கோடு என பொருள்படும் வகையில் வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். எனவே கந்தன் எனின் பற்றுக் கோடாக விளங்குபவன் எனக் கொள்வது பொருந்துமல்லவா? கொடுங் காற்றில் அலையும் கொடிக்கு கொழுகொம்பு அருகிருப்பின் பற்றிப் படர்ந்து வளர்ந்து இன்புறும். அவ்வாறே உலக வாழ்க்கைச் சுழலில் உழல்வார்க்குப் பற்றுக் கோடாவது கந்தனேயன்றி வேறொருவர்

அன்றென உணரின் உலகம் உய்யுமல்லவா? "கந்து" என்பது பற்றுக்கோடு என்ற அடிப் படையில், தொல்காப்பியத்திலும், திருக்குறளி லும், தெய்வமுறையும் தறி என்ற பொருளில் பட்டினப் பாலையிலும், தூண் என்ற பொருளில் திருமுருகாற்றுப்படை, சீவகசிந்தாமணி ஆகிய வற்றிலும் வந்துள்ளதை உணர்க.

"முருகு" என்பது அழகு, இளமை என பொருள்படும். முருகன் எனின் அழகன் எனலாம். பார்க்கும் பொருள் எல்லாவற்றிலும் அழகிருத்தல் போல அவன் எங்கும் நிறைந் துள்ளான் என்பதையே அது சுட்டுகின்றதென உணர்க. மலைநாட்டு மக்களின் தலைவனும் முருகன்—குறிஞ்சிக்கோமான்—குன்று தோறுடும் அழகனுவான். அன்பு ஒன்றே அவனை வழி படுவதற்குரிய மந்திரமும் சடங்கும் ஆகும். இன்ன இடம் என்ற வரையரையின்றி வழி படுவதற்கு. யாண்டும் நிறைந்த அழகே உருவாய் அவனியில் நிறைந்தவன். எளியார்க்கும் எளிய னுதும் முருகனுடைய அருளியல்பைப் பெறுவ தற்கு அரியதொன்ருக்கி உலகப் பொருள்களில் வைக்கும் பற்றை நீக்கி அவனிடத்தில் உறுதி யாகப் பற்றுவைப்பார்க்கே முருகன் வந்து அருள் செய்வான் என திருமுருகாற்றுப் படையில் கூறும் நக்கிரர் மலைமகள் மகன், ஆல்கெழு கடவுட் புதல்வன் என பலவாருகப் பாராட்டப்படும் செவ்வேள் தந்தையாம் சிவபிரானுக்கு பிரணவப் பொருளை உணர்த்தியதைக் "கொன்றைச் சடை

யார்க்கு ஒன்றைத் தெரியக் கொஞ்சித் தமிழைப் பகர்வோனே'' என்றும், நக்கீரனருக்கு "உலக முவப்ப'' என்றும், அடியெடுத்துக் கொடுத்ததை ''வளவாய்மை சொற்பிரபந்தமுள கீரனுக்கு கந்துன் மலர்வாய் இலக்கணங்கள் இயல்போதி அடிமோனை சொற்கிலங்க "உலக முவப்ப" என்றும் அருளால் அளித்து உகந்த பெரியோனே'' என்றும் பாடிய அருணகிரி நாதனரின் தமிழன்பன் சீர்தர சிறப்புடன் விளங் கும் சிற்றூர் எழிலார் எட்டிகுடியாகும்.

இங்கு முத்தமிழ் முருகன் மயில்மீதிவர்ந்து ஆறுமுகங்களோடும் பன்னிரண்டு திருக்கரங்க ளோடும் விழியாக முன்னின்று தன்னளி சுரந்து அடியார்கள்படும் அல்லல்கள் எல்லாம் தீர்த்து வேண்டிய வரங்கொடுக்கும் மெய்கண்ட தெய்வ மாய்க் கலியுக வரதனய்க் காட்சி தருகின்ருர்.

குற்றமில்லாத கொள்கையுடையவராய்த் தவமாகிய தந்தொழிலைசெய்து முடிப்பவருடைய நெஞ்சிலே ஆறுமுகங்களும் பொருந்தித் தோன்றும் இயல்பை உடையனவாம். ஒருமுகம் இருளையுடைய உலகம் குற்றமின்றிவிளங்கும்படி பல கிரணங்களையும் தோற்றுவிக்கவும், அம் முகத்திற்கேற்ற கையிரண்டில் ஒருகை ஞாயிற் றின் வெம்மை உயிர்கள் வருந்தாதபடித் தாங்கி விண்ணில் திரிகின்ற வேணுவிகட்குப் பாது காவலாக ஏந்திய நிலையிலும மற்ருெரு கை மருங்கிலும் ஆக அமைந்துள்ளது யானைமேல்

விரைந்துசெல்ல வேண்டி யானையைச்செலுத்தும் அங்குசத்தை ஒரு கையிலேந்தி, மற்றொரு கை செந்நிற ஆடையணிந்த தொடையின்மேல் கிடக்க தன்னை அன்பால் நினைந்து துதிக்கும் அடியவர்முன் தோன்றி அவரவர் வேண்டும் வரம் அருள்வது இரண்டாவது முகமாகும். இரு கைகளில் வேலும் கேடகமும் ஏந்தி அசுரரால் வேள்விகட்குத் தீங்குவராமல் காப்பது மூன்ருவது முகமாகும். ஒருகை முனிவர்கட்குத்தத்துவம் கடந்த பொருளைச் சொல்லாமல் சொல்லும் ஞானமுத்திரையைக் காட்டியவண்ணம் மார்பொடு விளங்க மார்பின் மாலையோடு சேர்ந்து மற்றொரு கை அழகுற விளங்க இவ்வுலகத்தில் வழங்காத வேதங்களையும் நூல்களையும் ஆராய்ந்து முனிவர்கள் ஏமமுறும்படி ஆராய்ந்து சந்திரன்போல் விளங்குவது நான்காவது முகமாகும். வீரவளை சுழன்று களவேள்விகட்கு ஒருகை முத்திரை கொடுக்க ஒருகை மணியை அசைத்து ஒலிசெய்ய, சென்ற போரில் வெகுண்டு வந்த பகைவர்களைத் தேய்த்து அழித்துக் கறுவுதல் கொண்ட மனத்தோடு களவேள்வி செய்தது ஐந்தாவது முகமாகும். ஒருகை நீல நிறத்தையுடைய மேகத்தாலே மழையைப்பெய்ய மற்ருெரு கை தேவமங்கையர்க்கு மணமாலை சூட்ட குறமகள் வள்ளியுடன் குலாவி நகை செய்வது ஆருவது முகமாகும். எனவே ஆறுமுகங்களுடன் அருள் பொழியும் திருமுருகனின் தெவிட்டாத காட்சியை எட்டிக்குடியில் காணலாம்.

வேதங்கள் முடிவாலும் வாக்காலும் மனத்தாலும் அளக்க முடியாத பெருமையையுடைய பரமன் மக்கள் உய்ய மலரில் தோன்றினன். அன்னை பராசக்தி அருளோடு ஆறு சேய்களை அணைத்து பக்தர்களுக்குப் பற்றுக்கோடாக விளங்கும் கந்தனைக் கொடுத்தாள். இதனை கந்தபுராணம் விரித்துரைக்கும்.

கற்பக விருக்ஷம் அதனடியிலிருந்து கேட்டால்தான் கொடுக்கும். சிந்தாமணி, சங்க-நிதி பதுமநிதிகளும் தம்மைவைத்து இருப்பவர்கட்கு மட்டுமே பயன் கொடுக்கும். ஆனால் ஸ்ரீ ஆறுமுக வேலவர் அருள் செய்ய நினைத்து விட்டால் அடியவர்கள் இருக்கும் இடம் தேடி வந்து அவரவர் வேண்டுவதை வேண்டியவாறே அளிக்கும் குணக்கடல் குமரன் என்பதை "வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட" என ஆற்றுப்படையும் "வேண்டிய போதடியார் வேண்டிய போகமது வேண்ட வெருதுதவு பெருமாளே" என அருணகிரிநாதர் திருப்புகழும் போற்றியுரைக்கும்.

எட்டிகுடிக் குமரனின் ஈகை வாகை கொடைப்புயங்களின்பெருமையினைசிறப்பித்துப் பாடிய அருணகிரிநாதர் "எட்டிகுடிப் பதிவேலா மேலோர் பெருமாளே, தற்பொறி வைத்தெனைப் பாராய், தாராய், தற்சமயத்தகலா, வேல்நாதா, தத்துமயிற் பரிமீதே நீதான் வருவாயே" என

பாட எழிலார் வள்ளியோடும் ஏந்திழை தெய்வானை யோடும் ஏழை அடியார்க்கு இரங்கிடும் அருள் ஞானவள்ளல் ஸ்ரீ ஆறுமுகவேலவர் அருணகிரி நாதர்மீது வேலும் மயிலும் குறியிட்டதாக வரலாறு கூறப்படுகிறது.

### திருமகள் பூசித்தது:

முன்னோர் காலத்தில் பிருகு முனிவரின் சாபத்தால் திருமால் நலிவுற்றதைக் கண்டு திருமகள் கலக்கமுற்றாள். கயிலாயம் சென்று கண்ணுதற் பெருமானிடம் முறையிட்டாள். பரமனும் "தென்னாட்டிலே உள்ள எட்டிகுடிப் பதிமேவி எம்மைப்பூசித்துப் பேறுபெறுவாயாக" என்று திருவருள் செய்தார். திருமகளும் எழிலார் எட்டிகுடி அடைந்து அளவிலா அன்பினால் ஐம்பொறி அடக்கி பாசுபத விரதமேற்கொண்டு, முறைப்படி சிவபூசனை செய்து ஆயிரம் நாமங்களால் அனுதினமும் அருச்சனை செய்து மனமுருகிக் கசிந்து கண்ணீர் மல்க வணங்கினாள். எம்பெருமானும் திருமகள் நினைந்த வண்ணம் திருமாலின் நலிவைப் போக்கியருள, திருமகளும் ஆனந்த பரவசத்துடன் திருமாலின் திருமார்பகம் சேர்ந்தாள்.


### சூரியன் பூசித்தது.

அட்ட மூர்த்தங்களில் அருக்கன், எண்டோளீசனை வழிபட எண்ணி, வசிட்ட முனிவரின் ஆணைப்படி எட்டிகுடிப்பதி மேவினான். சரவணப் பொய்கையில் நீராடி, வான்மீகி முனிவர் பூசித்த வள்ளலாரை முறை வழுவாது பூசித்து அவர்

திருவடிகளை வணங்கி "இடையறு அன்புனக்கு என்னூடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்முடையானே" என்ற திருவாக்குப்படி ஸ்ரீ சௌந்தரேசுவரரை நோக்கி "ஐயனே! நின்நினைவு இடையறு திருத்தல் வேண்டும்; எனக்கு உடலுறுதியும் உள்ள உறுதியும், திருவடிப் பற்றும் வேண்டும்" என அனுதினமும் வேண்டினன்; எம்பெருமானும் அவ்வாறே திருவருள் செய்தார். சூரியனும் பெறலரும் பேறு எய்தி தனதிருப்பிடம் சேர்ந்தான்.

## சனி பகவான் பூசித்தது.

ஒன்பது கோள்கள் எனப்படும் நவநாயகருள் சனிபகவானும் ஒருவர். இவரனைவரும் எட்டிகுடிக்கு வடபாலமைந்த திருக்கோளிலியில் உள்ள எம்பெருமானை வழிபட்டு பேறுபெற்றனர். ஒன்பதின்மரும் ஒரு திக்கு நோக்கியிருந்து வழிபடும் அடியார் அல்லல் நீக்குவர். இச்சிறப்பு வாய்ந்தவருள் ஒருவரான சனிபகவான் எட்டிவனம் சார்ந்து எல்லையில்லா ஆற்றல் பெற எண்ணி எண்ணற்ற நாட்கள் ஸ்ரீ சௌந்தரேசுவரரை பேரன்புடன் பூசனை செய்து தன்னை மறந்து தவமிருந்தார். எம்பெருமானும் சனிபகவான் குழைத்த அன்பிற்கு எளியராகி அடியார்கட்கு வேண்டுவன வெல்லாம் நல்கும் பெற்றிமையைச் சனிபகவானுக்கு அளித்து அருளினர். சனிபகவானும் திருவருளாணைப்படி அகில சராசரங்களையும் காத்தருளுகின்றார்.



தலவிருட்சம் வன்னி மரம்

## ஸ்ரீ வான்மீகி பூசித்தது.

பன்னெடுங்காலம் தவமிருந்த தலையாய தவத்தோர் பலருள் வான்மீகியும் ஒருவர். வாட்ட மெலாம் போக்கியருள் வள்ளலை வான்மீகர் எட்டிகுடிப்பதியில் எட்டி மரத்தடியில் கண்டார். பலகாலம் தன்னை மறந்து தவம் செய்தார். புற்று மூடிய நிலையினை அடைந்தார்.

பிருங்கி முனிவர் தம்மையும் சேர்த்து வழிபடாததை எண்ணிய பார்வதிதேவி சிவபெருமானுடன் இணைந்து பிரியாதிருக்கும் நிலையைப்பெற தவம் செய்ய நினைந்து பல இடங்களை ஆராய்ந்து எட்டிவனம் சார்ந்தாள். எட்டிமரத்தடியில் அன்னை பராசக்திக்கு அருள் புரிய சிவலிங்கத் திருமேனியுடனிருந்த வள்ளலைக் கண்டு ஆனந்தமுற்று அங்கேயே பலகாலம் தங்கி சிவபூசை செய்தனள்.

எம்பெருமான் அருளால் ஒருநாள் கண் விழித்த வான்மீகர் சிவபூசனை செய்யும் பார்வதி தேவியாரைக்கண்டார். பரவசமுற்று பக்தியுடன் பணிந்தேத்தினர். பார்வதி தேவி "விரதங்களில் சிறந்தது எது? என வான்மீகரை வினவ, சிவபெருமானைப் பிரியாதிருக்க விரும்பினல் ஸ்ரீ கேதாரீசுவர விரதமே சிறந்ததென அவரும கூறினர். அகிலாண்ட நாயகியாம் அன்னை பராசக்தியும் ஒன்றும் அறியாதவள் போல விரத மனுட்டிக்கும் முறையை விவரிக்க வேண்டு

மென்று சொல்ல, வான்மீகரும் வரன்முறையாக கூறலுற்ருர். (ஆனந்தவல்லியின் அளப்பருங் காட்சி என்ற தலைப்பில் விவரிக்கப்பட்டுள்ளது) முறைசிறிதும் தவருது மோன்பிருந்த அம்மைக்கு தன் இடபாகத்தை ஈந்து அருள் புரிந்து அர்த்த நாரீசுவரராய், அம்மையப்பனுய் ஆனர். ஆதி சேடனுலும் அளவிடற்கரிய பேரழகுடன் அம்மையின் முன் காட்சி அளித்தமையால் எம்பெருமான் ஸ்ரீ செளந்தரேசுவரர் என்ற திருநாமம் கொண்டார். அம்பிகையும் பரமனை விட்டுப் பிரியாது ஒருங்கிருக்கும் நிலைபெற்று பேரானந்தம் அடைந்தார். ஆனந்தவலலி என்னும் திருநாமம் பெற்ருர்.

வான்மீகியார் அம்மையையும் அப்பனையும் சிறிதும் வழுவாது சிவபூசனைசெய்து சிவயோகத் தினில் அமர்ந்து சிவயோகக் காட்சியில் எம்பெருமானைத் தரிசித்து சிவானந்த வெள்ளத் தில் திளைத்திருந்து இத்தலத்திலேயே எம்பெருமானிணையடிகளில்இரண்டறக் கலந்தார்

## முத்தரசன் அரசாண்டது

தமிழகத்தில் சிவபக்தியும் வள்ளல் தன்மையும் வீரமும் பொருந்த அரசாட்சி செய்த சோழமன்னர் பலராவர். அவர்களில் சீரும் சிறப்பும் வாய்ந்த முத்தரசன், எட்டிகுடியருகே அரண்மனையும்நகரமும் அமைத்து பலதிறப்பட்ட குடிமக்கள் அங்குவாழ வகை செய்து முறை

தவறாது அரசாண்டு வந்தான். அரும்பொருள் பெற்றதன் பயன் அடியார்க்கு ஆவன செய்தலே என்று உணர்ந்து அனுதினமும் அடியார்க்கு அமுதளித்து ஆண்டவனின் அன்பர்கட்கு அன்பனாய் சிவபெருமானிடத்தும் முருகப் பெருமானிடத்தும் பக்திமிக்கவனாய் இல்லறத்தை இனிது நடத்தி வந்தான்.

எட்டிகுடியில் இப்பொழுது காட்சியளிக்கும் வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ ஆறுமுக வேலவரை பிரதிட்டை செய்து நிபந்தங்கள் அமைத்து, நாட்பூசை, விழா முதலியவற்றை சிறப்புறச் செய்தான். பத்து நாட்கள் நடக்கும் சித்திராபௌர்ணமி உற்சவத்தை உன்னத நிலையில் நடத்தி, அபிஷேக ஆராதனைகளெல்லாம் அனுதினமும் குறைவின்றி நடைபெற அமைத்து, செல்வம் பெற்றதனாலாயபயனை நுகர்ந்து நீண்ட நாட்கள் அரசாட்சி செய்து ஆறுமுகக் கடவுளின் அருளை பரிபூரணமாகப் பெற்று. குகப்பெருமானது முத்தியின்பம் பெற்று கந்தலோகத்தை அடைந்தனன்.

## இத்தலத்தைப் பற்றிய பிரபந்தங்களும் நூல்களும்

1 எட்டிகுடி முருகன் பிள்ளைத்தமிழ்.
கோவை. கவியரசு, வித்வான்
திரு. கு. நடேசக் கவுண்டர் அவர்கள்

2. எட்டிகுடி முருகன் அந்தாதி,
செஞ்சொற் கொண்டல், வித்வான்
திரு. சொ. சிங்காரவேலன் M.A.,
தமிழ்விரிவுரையாளர் A. V. C. கல்லூரி மாயூரம்

எட்டிகுடித் தலவரலாறு:— (1) கி. பி. 1944இல் தேவஸ்தான வெளியீடு. திருச்சி புலவர் R. பஞ்சநதம் பிள்ளை அவர்களால் எழுதப் பெற்றது. (2) கி. பி. 1956இல் தேவஸ்தான வெளியீடு: மன்னார்குடி புலவர் ப. இராமநாத பிள்ளை அவர்களால் எழுதப்பெற்றது. (3) கி. பி. 1971இல் வெளியிடுவோர் எட்டிகுடி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி ஆலய நிர்வாகக்குழுவினர். நூதனமாக அமைத்து எழுதியவர்:- செந்தமிழ்ச் செம்மல். வித்வான் சொ. கணபதி தேசிகர், முதனிலைத் தமிழாசிரியர், நகராட்சி உயர்நிலைப்பள்ளி கும்பகோணம்.

## திருப்பணிகள்.

கி. பி. 1920இல் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் நடைபெற்றது. 22—3—44இல் கொக்கரித்த விநாயகர் கோவில் திருப்பணி செய்யப்பெற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. கி. பி. 1952இல் அநேக திருப்பணிகள் செய்விக்கப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடத்தி வைக்கப் பட்டது. 1965ஆம் ஆண்டில் பல நூதன திருப்பணிகள் செய்யப்பட்டு அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

**சகல வசதிகளுடன் கூடிய திருமணமண்டபமும், இறைவழிபாட்டுக்கு வரும் யாத்ரிகர்களுக்கு தங்கும் விடுதியும் கட்டப்பட்டுள்ளது.**

❋

நிர்வாகம்:

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைக்கு உட்பட்டது.

**எம். சுப்பையா,** B. A.,
செயல் அலுவலர்.

## ஸ்ரீ அருணகிரிநாதர் திருவாய் மலர்ந்தருளிய
## எட்டிகுடித் திருப்புகழ்

உரமுற் றிருசெப் பெனவட் டமுமொத்
திளகிப் புளகித் —திடமாயே
உடைசுற் றுமிடைச் சுமையொக் கவடுத்
தமிதக் கெறுவத் —துடன்வீறு
தரமொத் துபயக் களபத் தளமிக்
கவனத் தருணத் —தனமீதே
சருவிச் சருவித் தழுவித் தழுவித்
தவமற் கவிடுத் —துழல்வேனோ
அரிபுத் திரசித் தசவக் கடவுட்
கருமைத் திருமைத் —துனவேளே
அடல்குக் குடநற் கொடிகட் டியனர்த்
தசுரப் படையைப் பொருவோனே
பரிவிற் றவருக் கருள்வைத் தருள்வித்
தகமுத் தமிழைப் பகர்வோனே
பழனத் தொளிர்முத் தணியெட் டிகுடிப்
பதியிற் குமரப் —பெருமாளே.

✻

ஓங்குமைம்புல னோடநினைத்தின் —பயர்வேனை
ஓம்பெறும்ப்ரண வர்தியுரைத்தென் —றனையாள்வாய்
வாங்கிவெங்கணை சூரர்குலக்கொம் —புகடாவி
வாங்கிநின்றன ஏவிலுகைக்குங் —குமரேசா
மூங்கிலம்புய வாசமணக்குஞ் —சரிமானும்
மூண்டபைங்குற மாதுமணக்குந் —திருமார்பா
காங்கையங்கறு மாசின்மனத்தன் —பர்கள் வாழ்வே
காஞ்சிரங்குடி ஆறுமுகத்தெம் —பெருமாளே.

கடலொத்த விடமொத்த கணையொத்த பிணையொத்த
கயலொத்த மலரொத்த —விழிமாஞர்

கனசெப்பு களினத்து முலைவெற்பை நிகர்செப்பு
கதிர்முத்து முலைதைக்க —அகலாதே

மிடலுற்ற கலவிக்கு ளுளநச்சி வளமற்று
மிடிபட்டு மடிபட்டு —மனமாழ்கி

மெலிவுற்ற தமியற்கு நிருபத்ம சரணத்தை
மிகநட்பொ டருள்தற்கு —வருவாயே

தடையற்ற கணைவிட்டு மணிவஜ்ர முடிபெற்ற
தலைபத்து டையதுட்டன் —உயிர்போக

சலசத்து மயிலுற்ற சிறைவிட்டு வருவெற்றி
தருசக்ர தரனுக்கு —மருகோனே

திடமுற்ற கனகப்பொது வில்நட்பு டனடித்த
சிவனுக்கு விழியொத்த புதல்வோனே

செழுநத்து மிழுமுத்து வயலுக்குள் நிறைபெற்ற
திகழெட்டி குடியுற்ற. —பெருமாளே.

❋

மைக்குழ லொத்தவை நீலோ மாலோ
அக்கணி ணைக்கிணை சேலோ வேலோ
மற்றவர் சொற்றெளி பாலோ பாகோ —வடிதேஞே

வத்திர மெய்ச்சசி தாஞே நாஞே
குத்துமு லைக்கிள நீரோ மேரோ
வைப்பதி டைக்கிணை நூலோ மேலோ —வெனமாதர்

தக்கவு றுப்பினுள் மாலே மேலாய்
லச்சைய றப்புணர் வாதே காதே
சைச்சையெ னத்திரிநாயே ஞேயா —தலையாதே

தற்பொறி வைத்தருள் பாராய் தாராய்
தற்சமய யத்தக லாவே ளுதா
தத்தும யிற்பரி மீதே நீதான் —வருவாயே

முக்கணர் மெச்சிய பாலா சீலா
சித்தசன் மைத்துன வேளே தோளார்
மொய்த்தம ணத்தது ழாயோன் மாயோன்—மருகோனே

முத்தமிழ் வித்வவி னோதா கீதா
மற்றவ ரொப்பில ரூபா தீபா
முத்திகொ டுத்தடி யார்மேல் மாமால் —உறுவோனே

இக்குவி ரைத்தவி ராலூர் சேலூர்
செய்ப்பழ நிப்பதி யூரா வாரூர்
மிக்கவி டைக்கழி வேளூர் தாரூர் —வயலூரா

எச்சுரு திக்குளு நீயே தாயே
சுத்தவி றற்றிறல் வீரா தீரா
எட்டிகு டிப்பதி வேலா மேலோர் —பெருமாளே.

ராஜன் பிரஸ், நாகப்பட்டினம்.